

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (21.12.2024) முகாம் அலுவலகத்தில், எழுத்தாளர் ஆ.இரா.வேங்கடாசலபதி தான் எழுதிய “திருநெல்வேலி எழுச்சியும் வ.உ.சி.யும் 1908” என்ற நூலுக்கு சாகித்ய அகாதெமி விருது அறிவிக்கப்பட்டதற்காக சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

### வங்கக்கடலில்

# காற்றழுத்த தாழ்வு மண்டலம், படிப்படியாக வலுவிழக்கும் !

## இந்திய வானிலை ஆய்வு மையம் தகவல்

சென்னை, டிச.22-

வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலம், படிப் படியாக வலுவிழக்க வாய்ப் புள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித் துள்ளது.

சென்னையில் இருந்து 450 கிலோமீட்டர் தொலை வில் நிலைகொண்டிருந்த காற்றழுத்த தாழ்வு மண்ட லம் கடந்த 6 மணி நேரத் தில் மணிக்கு 7 கிலோ மீட்டர் வேகத்தில் கிழக்கு வடகிழக்கு திசையில் நகர்ந் துள்ளது. இது அடுத்த 12 மணி நேரத்திற்குப் பிறகு படிப்படியாக கடலிலேயே வலுவிழக்கும் என்று தெரி விக்கப்பட்டுள்ளது. முன்ன தாக இந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் இன்றோ அல்லது நாளையோ வலு விழந்து காற்றழுத்த தாழ்வு பகுதியாக வறண்ட காற் றின் உதவியுடன் மீண்டும் தமிழக பகுதிகளை ஓரிரு நாட்களில் அடையக்கூடும் என வானிலை ஆய்வாளர் கள் தெரிவித்திருந்தனர். இதன்மூலம் தமிழ்நாட்டில் பரவலாக வரும் 24ந் தேதிக்கு மேல் மிதமான மழைக்கு வாய்ப்பு இருப்ப தாக கூறப்படுகிறது. அதன் பின்னர், இந்த தாழ்வு பகுதி வலுவிழந்து 26ந் தேதிக்கு பிறகு வங்கக்கடலில் மேலும் ஒரு புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாவதற்கான சாத்தியமான சூழல் நிலவி வருவதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (21.12.2024) முகாம் அலுவலகத்தில், கழக மாணவரணி இணைச் செயலாளர் – வழக்கறிஞர் சி.ஜெரால்டு கிறிஸ்துமஸ் பண்டிகையை யொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

### இன்று நடைபெறுகிறது !

# கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் ஆலோசனைக் கூட்டம் !

## தயாநிதி மாறன் எம்.பி. அறிவிப்பு!

சென்னை, டிச. 22-

கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் ஆலோசனைக் கூட்டம் இன்று (22.12.2024 - ஞாயிறு) மாலை 4.00 மணி யளவில் சென்னையில் நடைபெறும் என கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் செயலாளரும், தி.மு.க பாராளுமன்ற குழு வின் துணைத் தலைவரு மான தயாநிதி மாறன், எம்.பி. அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் மாநில நிர்வாகிகள் அளவி லான ஆலோசனைக் கூட் டம் இன்று (ஞாயிறு) மாலை 4.00 மணியளவில் சென்னையில் நடைபெறு கிறது. இக்கூட்டத்தில் திராவிட மாடல் நாயகர், கழகத் தலைவர், தமிழ் நாடு முதலமைச்சர் அவர் களின் 72வது பிறந்தநாளை முன்னிட்டு கழக சட்ட மன்ற உறுப்பினர்கள், சார்பு அணிகள், உள்ளாட் சிகளின் பிரதிநிதிகள் மற் றும் கழக நிர்வாகிகள் பங் கேற்கும் மாபெரும் கிரிக்கெட் போட்டியை கழக இளைஞரணிச் செய லாளரும், தமிழ்நாடு துணை முதலமைச்சரு மான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் துவக்கி வைக்க விருக்கின்ற விழாவை சிறப்பான முறையில் நடத் துவது குறித்தும், சென் னையில் பிப்ரவரி 1, 2 ஆகிய தேதிகளில் நடை பெறவுள்ள கிரிக்கெட் போட்டிகளை சிறப்பான முறையில் நடத்துவது குறித்தும் மற்றும் மாநிலம் முழுவதும் பல்வேறு விளையாட்டுப் போட்டி களை சிறப்பாக கொண் டாடுவது பற்றியும் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் விவாதிக்கப்படும் எனவும், இக்கூட்டத்திற்கு மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு தயாநிதி மாறன் அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள் ளார்.

### பேரா.சுப.வீரபாண்டியன் தலைமை! மாநில திட்டக்குழு செயல் துணைத் தலைவர்

# ஜெ.ஜெயரஞ்சனின் 4 நூல்கள்: துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வெளியிடுகிறார்!

## அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா பெறுகிறார்! கரு.பழனியப்பன் – சே.மெ.மதிவதனி வாழ்த்துரை!

சென்னை, டிச. 22 -

மாநில திட்டக் குழு செயல் துணைத் தலைவர் ஜெ.ஜெயரஞ் சன் அவர்கள் புதிதாக எழுதியுள்ள ‘புலம்பெயர் தொழிலாளர்கள்’, ‘வாகன உற்பத்தியில் தமிழ்நாடு’ ஆகிய இரண்டு தமிழ் நூல்களும் அதன் ஆங்கில மொழியாக்கங்கள் இரண்டு நூல்களும் என 4 நூல்கள் வெளியீட்டு விழா கருஞ்சட்டைப் பதிப்பகம் சார்பில் இன்று (22.12.2024 - ஞாயிற்றுக்கிழமை) காலை 10.30 மணியளவில் சென்னை - அடையாறு, முத்தமிழ்ப் பேரவையில் நடைபெறுகிறது.

இவ்விழாவிற்கு திராவிட இயக்க தமிழர் பேரவைத் தலைவர் பேரா சிரியர் சுப.வீரபாண்டியன் தலைமை வகிக்கிறார்.

விழாவில் துணை முதல்வர் உத யநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு - நான்கு நூல்களையும் வெளியிட்டுச் சிறப்புரையாற்று கிறார்.

தொழில்துறை அமைச்சர் டி.ஆர். பி.ராஜா நூல்களைப் பெற்றுக்கொண்டு வாழ்த்துரை வழங்குகிறார்.

இவ்விழாவில் திரைப்பட இயக்கு நர் கரு.பழனியப்பன், திராவிடர் கழக துணைப் பொதுச் செயலாளர் சே.மெ.மதிவதனி ஆகியோர் வாழ்த் துரை வழங்குகின்றனர்.

மாநில திட்டக்குழு செயல் துணைத் தலைவர் ஜெ.ஜெயரஞ் சன் ஏற்புரை நிகழ்த்துகிறார்.

இவ்விழாவிற்கு சிற்பி செல்வ ராஜ், சென்னை சவுந்தர்ராஜன் ஆகி யோர் முன்னிலை வகிக்கின்றனர்.

பெல்.இராஜன் வரவேற்புரை யாற்றுகிறார்.

விழாவில், இக்லாஸ் உசேன் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கு கிறார்.

திராவிடச் செல்வன் நன்றி கூறு கிறார்.

இவ்விழாவில் அனைவரும் பங் கேற்றுச் சிறப்பிக்குமாறு ‘கருஞ் சட்டை பதிப்பகம்’ அழைக்கிறது.

